# வன்னித் திருப்பதியிலே

வன்னித் திருப்பதியிலே
கோவில் கொண்ட இனியவளே
கன்னிமரி மாதாவே மருதமடுத் தாயவளே
மருதமடுத் தாயவளே
அடைக்கலமும் ஆதரவும்
புகலிடமும் உன்பதியே
அண்டி வந்தோம் நாங்களம்மா
உன்னருளால் காத்தருள்வாய் - அம்மா

வன்னித்

தொல்லைகளால் சீரழிந்து
தத்தளிக்கும் வேளையிலும்
பிள்ளைகளை நாம் இழந்து
பேதலிக்கும் வேளையிலும்
ஊரிழந்து உறவிழந்து
ஊசலாடும் வேளையிலும்
மருதமடு மாதாவே
சேர்த்தணைத்துக் காத்திடுவாய் அம்மா

வன்னித்

பச்சை இளம் பிஞ்சுகளின்
பசிக்கொடுமை பாரம்மா
பந்த சொந்தம் பறிகொடுத்து
பதறுகிறோம் பாரம்மா
வெந்த புண்ணின் வேதனையில்
நொந்த குரல் கேளாம்மா
வந்தோம் உந்தன் சன்னிதிக்கு
வேண்டும் குரல் கேளம்மா அம்மா..

வன்னித்